TAMIL NADU LEGISLATURE LIBRARY
12 JUL 1978
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1978 பிப்ரவரி 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்டவினாக்கள்

வெல்லத்தின் விலை.

* குறுகியகால வினா எண். 2. திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி செய்யும் பெருவாரியான விவசாயிகள் வெல்லத்தின் விலை வீழ்ச்சி காரணமாக பாதிக்கப்படுவதைத் தடுக்க உற்பத்தி செய்யப்பட்ட எல்லா கரும்பையும் அரசு சர்க்கரை ஆலைகளில் எடுத்துக் கொள்ளப்படுமா ?

(ஆ) விலை வீழ்ச்சியைப் பற்றி அரசு அறியுமா ?

(இ) இதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) பொதுத் துறை சர்க்கரை ஆலைகள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தனியார் சர்க்கரை ஆலைகள் தங்களுக்குத் தேவையான அளவு கரும்பை ஏற்கெனவே பதிவு செய்துள்ளன. எனவே பதிவு செய்யப்படாத கரும்பினை தற்போது எடுக்க இயலாது.

(ஆ) வெல்லத்தின் விலை வீழ்ச்சியைப் பற்றி அரசு அறியும்.

(இ) விலை வீழ்ச்சி அகில இந்திய வர்த்தக நிலையைப் பொறுத்தது. மத்திய அரசு வெல்லம் ஏற்றுமதி செய்வதை தடை செய்ததும் வெல்லத்தின் விலை வீழ்ச்சிக்கு ஓரளவு காரணமே என்று கருதப்படுகிறது. தற்போது மேற்படி ஏற்றுமதி தடை மத்திய அரசால் நீக்கப்பட்டு விட்டதாக அறியப்படுவதால் நிலைமை சீரடையும் எனக் கருதப்படுகிறது. வெல்லம் ஏற்றுமதிக் கொள்கை மத்திய அரசின் முடிவில் உள்ளது.

[1978 பிப்ரவரி 27

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வெல்லத்தினுடைய விலையானது தலைகீழாக வீழ்ச்சியடைந்து இருக்கிறது. 10 கிலோ வெல்லம் ஏறக்குறைய 20 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்தது, இப்போது 4 ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிற அளவுக்கு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த விவசாயிகள் வெல்லம் தயாரிப்பதற்கு ஆகிற கூலியைக்கூட கொடுக்க முடியாத நிலையில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி வெல்ல உற்பத்தியாளர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய வருத்தத்தை, இழப்பைப் போக்குவதற்காக அரசாங்கம் அந்த வெல்லத்தை கொள் முதல் செய்து உதவி செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் அரசிடம் இல்லை. சர்க்கரை சுலபமாகக் கிடைப்பதால், சர்க்கரை மற்றும் வெல்லத்தின் விலை பொதுவாகக் குறைந்திருக்கிறது. மத்திய அரசுதான் இதன்மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது வெல்லம், சர்க்கரையை ஏற்றுமதி செய்யாததால், விலை வீழ்ச்சி அடைந்தது என்று குறிப்பிட்டார்கள். இது சம்பந்தமாக ஏற்றுமதி செய்வதற்கு மாநில சர்க்காருக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று மத்திய அரசுடன் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவே நான் என்னுடைய பதிலிலே சொன்னேன், தடை நீக்கப்படுவதாகத் தெரிய வருகிறது என்று சொன்னேன். அப்படி தடை நீக்கப்பட்டால் வெல்லத்தினுடைய விலை ஏறுகிற நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, வெல்லத்தின் விலை வீழ்ச்சி அடைந்திருப்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அப்படி விலை சீரடைகின்ற வரையில், கரும்புக்கு போனஸ் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கரும்புக்கு போனஸ் கொடுக்கும் உத்தேசம் இந்த அரசிடம் இல்லை. மேலும் கரும்பினுடைய விலையை நிர்ணயிப்பதே மத்திய அரசுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, வட ஆறகாடு மாவட்டத்திலே அதிகமாக உற்பத்தியாவது வெல்லம். வெல்லத்தைக் காய்ச்சி, பாகு எடுத்து, அதற்காக கரும்பு அதிக

1978 பிப்ரவரி 27]

மாச சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் விலை வீழ்ச்சி அடைந்திருக்கிற இந்தத் தருணத்தில், டெல்லிக்குச் சென்று மத்திய அரசோடு போராடியாவது, நயமாகப் பேசியாவது விலையை ஏற்றுவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய கேள்விக்கு ஏற்கனவே பதில் அளித்திருக்கிறேன். மேலும் சர்க்கரை ஆலைகளிலே ஒப்பந்தம் செய்யக்கூடியவர்களின் கரும்புகளை எடுத்துக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் இப்போது இருக்கின்றன. ஒப்பந்தம் செய்தவர்கள், வெளியே வெல்லத்தினுடைய விலை அதிகமாக இருந்தால், ஒப்பந்தத்தை மீறி, கரும்பை அவர்கள் வெளியே விற்கிற சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் மத்திய அரசு தடையை நீக்குவதாகத் தெரியவருகிறது. அப்படித் தடையை நீக்கினால் உடனடியாக வெல்லத்தின் விலை ஏறுகின்ற சூழ்நிலை இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட 14·3 லட்சம் டன் வெல்லம் உற்பத்தி செய்வதை இந்த அரசு இலக்காக வைத்திருக்கிறது. அப்படி இருக்கும்போது வெல்லத்தின் விலை வீழ்ச்சியாக இருந்தால் அடுத்த வருடம் யாருமே வெல்லம் உற்பத்தி செய்யமாட்டார்கள். அப்படி இருக்கும்போது அரசாங்கம் நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிற இலக்கை பூர்த்தி செய்யமுடியாத ஆபத்து இருக்கிறது என்பதை இந்த அரசு உணருமா ? அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக்கொள்ளுமா என்பதைத் தெரிந்து கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஆபத்தை நீக்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, நெல் கொள்முதல் செய்வதற்கு அரசு கொள்முதல் நிலையங்கள் வைத்து இருப்பதுபோல், சர்க்கரை, வெல்லம் ஆகியவைகளை சேகரிக்கும் கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்துவதற்கும் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை. மத்திய அரசின் கொள்கையைப் பொறுத்துத்தான் இதுவும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி போன்ற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு இலக்குக்கு அதிகமாகவே கரும்பு வருகிறது. ஆனால் பெரம்பலூர் போன்ற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 1,500 டன் அரைக்க வேண்டும் என்று இலக்கு வைத்திருந்தால், 700—800 டன்னுக்குக் கூட கரும்பு வருவது இல்லை. ஆகவே, அப்படி அதிகமாக கள்ளக்குறிச்சி போன்ற சர்க்கரை ஆலைகளுக்கு வரும் கரும்பை, பெரம்பலூர் போன்ற இடங்களுக்கு அனுப்பி வைக்க அரசு அனுமதி அளிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல் நிலைமைகள் இருந்தால் அரசு பரிசீலனை செய்யும்.

சென்னை கடற்கரையை அழகுபடுத்தல்.

*281—வினா—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் தற்பொழுது எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டுள்ளது?

(ஆ) அதற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) சென்னை வானொலி நிலையத்திலிருந்து நேப்பியர் பாலம் வரையில் உள்ள சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்துவதற்கான திட்டம் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதற் பகுதியாக சென்னை வானொலி நிலையத்திலிருந்து காந்தி அடிகள் சிலைவரை செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக, இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 2,90,855 ஆகும்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக நீண்டகாலமாக கடற்கரையில் மக்களின் நடமாட்டம் அதிகமாகி அங்கேயிருக்கும் மணல் அழுக்காகி இருப்பதால், அதை மாற்ற அரசிடம் வேறு ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS